# விழுப்புரம் நகராட்சி

**2020–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.15 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற **"சாதாரண கூட்ட"** நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **ந.தட்சணாமூர்த்தி, பி.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப்பொருள்

**1.** இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரது செப்டம்பர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம். ( / /சி1)

**2.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள தென்மேற்கு கட்டண கழிவறை மற்றும் கிழக்கு பாண்டி ரோடில் உள்ள மீன் மார்கெட் ஆகிய இடங்களில் வசூல் பணிக்கான குத்தகை இனங்கள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் பொது ஏலத்தில் கலந்துக்கொண்டு ஏலம் கோரி ஏலத்தொகை செலுத்த எவரும் முன்வராத நிலையில் மேற்படி இனங்களுக்கு 01.06.2020 முதல் வசூல் பணியினை நிர்வாகம் மூலம் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து இப்பணிக்கு தேவையான டிக்கட் புத்தகங்கள் அச்சடிக்க உள்ளூர் அச்சகங்களில் விலைப்புள்ளி கோரியதில் 27.05.2020 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | அச்சகத்தின் விவரம் (2) | 1000 டிக்கட் கொண்ட ஒரு புத்தகத்திற்கு தொகை (3) | | |
|---|---|---|---|---|
| 1. | விழுப்புரம் மாவட்ட அச்சகம் மற்றும் எழுதுபொருள் கூட்டுறவு சங்கம் லிட், விழுப்புரம். | சிறுநீர் கழிக்க | : | ரூ.130/– |
| | | மலம் கழிக்க | : | ரூ.130/– |
| | | மீன் நாளங்காடியின் கட்டணம் | : | ரூ.150/– |
| 2. | கிருஷ்ணா அச்சகம், விழுப்புரம் | சிறுநீர் கழிக்க | : | ரூ.180/– |
| | | மலம் கழிக்க | : | ரூ.180/– |
| | | மீன் நாளங்காடியின் கட்டணம் | : | ரூ.190/– |
| 3. | ஜெய்ஹரி ஆப்செட், விழுப்புரம் | சிறுநீர் கழிக்க | : | ரூ.150/– |
| | | மலம் கழிக்க | : | ரூ.150/– |
| | | மீன் நாளங்காடியின் கட்டணம் | : | ரூ.170/– |

**அலுவலக குறிப்பு:–**

அ) வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு அச்சகம் மற்ற இரு நிறுவனங்களைவிட குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று அனுமதிக்கலாம்.

ஆ) 01.06.2020 முதல் நிர்வாகம் மூலம் வசூல்பணி மேற்க்கொள்ள வேண்டியிருப்பதால் முன் அனுமதி பெற்று டிக்கட் அச்சடிக்க உத்திரவிட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(A1 / 9391 / 2017)

**3.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளின் புதிய மின்கம்பங்களில் LED விளக்குகள் பொருத்துவதற்கு தேவையான Clamps, LED விளக்குகளை தாங்கி பிடிக்கும் Angles மற்றும் LED Fitting Accessories ஆகியவற்றை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 26.08.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | A to Z Traders, ஒப்பந்ததாரர். | ரூ.694217.60/– | 0.41% குறைவு |
| 2 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.701769.60/– | 0.68% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் A to Z Traders, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.41% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2627/2020/இ2)

**4.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 21 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள OHT மின்மோட்டர்கள், மினி OHT மின்மோட்டார்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலைய மின்மோட்டார்களில் (1HP முதல் 20HP வரை) ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பணிக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 15.07.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர். | ரூ.831220.32/– | 0.10% குறைவு |
| 2 | திரு.N.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.840654.08/– | 1.03% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.10% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4088/2020/இ2)

**5.** விழுப்புரம் நகராட்சியில் 22 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள OHT மின்மோட்டர்கள், மினி OHT மின்மோட்டார்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலைய மின்மோட்டார்களில் (1HP முதல் 20HP வரை) ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பணிக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 15.07.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர். | ரூ.831444.32/– | 0.07% குறைவு |
| 2 | திரு.N.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.840654.08/– | 1.03% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (4089/2020/இ2)

**6.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வாராந்திர காணொளிக்காட்சி ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்–2020–ல் உலர்கழிவுகளை இறுதியாக்கம் செய்து (Disposal Of Dry Waste) எரிபொருட்களாக மாற்றி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்புவதற்கு தகுந்த வகையில் கட்டமைத்து (Size Reduction of Solid Dry Waste) தயார் செய்யும் பெயிலிங் இயந்திரத்தை (Bailing Machine) வார்டு எண்.28 பொன்னேரியில் அமைந்துள்ள வளமீட்பு மையத்தில் (Resource Recovery Centre) – 1 எண்ணிக்கை (12 Ton) மற்றும் வார்டு எண்.38, எருமணந்தங்கலில் அமைந்துள்ள வளமீட்பு மையத்தில் (Resource Recovery Centre) – 1 எண்ணிக்கை (20 Ton) ஆக மொத்தம் 2 எண்ணிக்கையிலான பெயிலிங் இயந்திரத்தை (Bailing Machine) சப்ளை செய்யும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.6,00,000/–ம் தயார் செய்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரலாம்.

(7277/2020/இ2)

**7.** விழுப்புரம் நகராட்சியில் தனியார் மேன்பவர் மூலம் Electrician Gr–II–7 பணியாட்களை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.9.45 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.08.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூ.) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | 926100.00 | 0.47% குறைவு |
| 2 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | 940800.00 | 1.11% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.47% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5771/2020/இ2)

**8.** விழுப்புரம் நகராட்சியில் தனியார் மேன்பவர் மூலம் Electrician Gr–II – 3 நபர்கள், Electrician Helper–3 நபர்கள் மற்றும் JCB Driver – 1 பணியாட்களை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.**9.80** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **28.08.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூ.)** | **சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | **961200.00** | **0.45%** குறைவு |
| 2 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | **981360.00** | **1.64%** அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.45%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(5770/2020/இ2)**

**9.** இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தின் கிழக்குபுறம் நுண்உர செயலாக்க மையத்திற்கு எதிரே சுற்றுச்சுவர் இல்லாததால், இரவு நேரங்களில் சிந்தாமணி மற்றும் சிலப்பதிகார தெருவிலிருந்து பொதுமக்கள் மற்றும் இருசக்கர வாகனங்களின் போக்குவரத்தால், சமூக விரோத செயல்கள் மற்றும் திறந்தவெளி மலம் கழித்தல் போன்ற செயல்களை தடுக்கும் விதமாக, மேற்கண்ட வளாகத்தின் கிழக்குபுறம் நுண்உர செயலாக்க மையத்திற்கு எதிரே சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**7.00** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம். **(2925/2020/இ1)**

**10.** 2020–21–ம் ஆண்டு பருவமழை பொய்த்ததால் விழுப்புரம் நகராட்சிக்கு குடிநீர் ஆதாரமான எல்லீஸ்சத்திரம் தலைமை நீரேற்று நிலையத்தில் (தென்பெண்ணையாறு) நிலத்தடி நீர்மட்டமானது குறைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதை சமாளிக்கும் விதமாக, சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீரினை எல்லீஸ்சத்திரம் அணைக்கட்டிற்கு கொண்டு வருவதற்கு (6 தினங்களுக்கு) பணியாட்களை கொண்டு குழுக்கள் அமைத்து அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் Torch Light வழங்குதல், வாகன வசதிகள் ஏற்படுத்தி தருதல், மணல் மூட்டை, சணல் பைகள், சிமெண்ட் சாக்குகள், சவுக்கு கட்டைகள் மற்றும் சணல் ஆகியவற்றை சப்ளை செய்தல் மற்றும் Hitachi, JCB இயந்திரங்கள் மூலம் அந்தந்த பகுதியின் ஆற்றுப்படுகையை தூர்வாருதல் மற்றும் கால்வாய் ஏற்படுத்துதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.**3.45** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம். **(7433/2020/இ2)**

**11.** விழுப்புரம் நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையமான எல்லீஸ்சத்திரம் மற்றும் பில்லூர் பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் தோராயமாக 11 கி.மீ முதல் 13 கி.மீ வரை அடிக்கடி பழுது ஏற்பட்டு குடிநீரானது வீணாக செல்வதால், மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதை தவிர்க்கும் விதமாக, மேற்கண்ட பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் மற்றும் பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

(7278/2020/இ2)

**12.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.28 பொன்னேரியில் அமைந்துள்ள வளமீட்பு மையத்தில் (Resource Recovery Centre) – 1 எண்ணிக்கை (12 Ton) மற்றும் வார்டு எண்.38, எருமணந்தங்கலில் அமைந்துள்ள வளமீட்பு மையத்தில் (Resource Recovery Centre) – 1 எண்ணிக்கை (20 Ton) ஆக மொத்தம் 2 எண்ணிக்கையிலான பெயிலிங் இயந்திரத்தை (Bailing Machine) சப்ளை செய்ய ரூ.6,00,000/—க்கு தகுதியான நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரியதில் 25.09.2020 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | நிறுவனத்தின் பெயர் (2) | விலைப்புள்ளி ரூ. (3) |
|---|---|---|
| 1 | M/s Ace Automation,<br>S.F.No.228/1, MGR Street,<br>Sivanandhapuram,<br>Saravanampatty (Po),<br>Coimbatore – 641 035. | ரூ.5,45,160.00/— |
| 2 | M/s Hi Tech Fabs,<br>No.240, Sanganoor Road,<br>Ganapathy,<br>Coimbatore – 641 006. | ரூ.5,97,375.00/— |
| 3 | M/s Integrated Equipment,<br>No.92, Balamurugan Nagar,<br>M.K.P. colony, Ganapathy,<br>Coimbatore – 641 006. | ரூ.6,14,337.50/— |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் M/s Ace Automation, Coimbatore நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(7277/2020/இ2)

**13.** விழுப்புரம் நகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள 5 ஊராட்சிகளான 1).காகுப்பம் 2).சாலாமேடு 3).எருமணந்தாங்கல் 4).வழுதரெட்டி மற்றும் 5).பானாம்பட்டு பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்திட கழிவு நீரேற்று நிலையங்கள், கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்திற்கு சம்மந்தப்பட்ட SF எண்ணின் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள இடங்களை பாதாள சாக்கடை திட்டத்திற்கு ஒதுக்கப்படுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கழிவுநீர் நிலையங்களின் விபரம் | இடத்தின் பெயர் | S.F. எண் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | கழிவுநீரேற்று நிலையம் – 1 | வழுதரெட்டி – பகுதி–I சக்தி நகர் | 44/1A1, 45/1 | 10m x 10m |
| 2 | கழிவுநீரேற்று நிலையம் – 2 | வழுதரெட்டி–பகுதி–II நெடுஞ்சாலை துறை அலுவலகம் அருகில் உள்ள கொண்டங்கி சாலை | 52/pt | 10m x 10m |
| 3 | கழிவுநீரேற்று நிலையம் – 3 | வழுதரெட்டி – பகுதி–IV புதிய பேருந்து நிலையம் அருகில் (VGP நகர்) | 3/19 | 10m x 10m |
| 4 | கழிவுநீரேற்று நிலையம் – 4 | சாலாமேடு – பகுதி–VI மயானம் | 242 | 10m x 10m |
| 5 | கழிவுநீரேற்று நிலையம் – 5 | காகுப்பம் – பகுதி–VIII புறம்போக்கு | 21/1 | 10m x 10m |
| 6 | கழிவுநீரேற்று நிலையம் – 6 | எருமணந்தாங்கல் சாலை – பகுதி–IX அங்காளம்மன் கோயில் அருகில் | 37 | 10m x 10m |
| 7 | கழிவுநீரேற்று நிலையம் – 7 | பானாம்பட்டு – பகுதி–X இரயில் பாதை அருகில் (ஜெயகௌரி நகர்) | 13/2B | 10m x 10m |
| 8 | கழிவுநீரேற்று நிலையம் – 8 | பானாம்பட்டு – பகுதி–XI வி.பெரிய குச்சிப்பாளையம் | 357/2B | 10m x 10m |
| 9 | கழிவுநீர் உந்து நிலையம் – 1 | வழுதரெட்டி–பகுதி–III பாண்டியன் நகர் (LF Road) | 175,174 | 30m x 30m |
| 10 | கழிவுநீர் உந்து நிலையம் – 2 | சாலாமேடு – பகுதி–V இராஜராஜன் நகர் | 79/pt | 30m x 30m |
| 11 | கழிவுநீர் உந்து நிலையம் – 3 | சாலாமேடு – பகுதி–VII மணி நகர் | 341/8, 341/9 | 30m x 30m |
| 12 | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 4.56 MLD | சாலாமேடு மயானம் | 242 | 2.471 acres (Further 1 acre is required) |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். **(7907/2017/இ3)**

**14.** விழுப்புரம் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த தமிழக அரசு அரசாணை (2 ப) எண்.01, நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் (குவ 3(2)) துறை நாள்.03.01.2020 மூலமாக ரூ.263.00 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்திட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தில் (IUDM) மானியம், உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) மூலமாக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு நிறுவனத்திடம் (HUDCO) கடன் பெற்று செயல்படுத்திட ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, 27.02.2020–ஆம் தேதிய நகர்மன்ற கூட்ட தீர்மான எண்.1968–ல் திட்டம் செயல்படுத்திட அனுமதி அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) மூலமாக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு நிறுவனம் ரூ.251.67 கோடி என திருத்திய மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடான ரூ.251.67 கோடியில் அதன் பங்களிப்பாக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தில் (IUDM) மானியமாக ரூ.62.92 கோடியும் (25%), உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ரூ.25.17 கோடியும் (10%) மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) மூலம் HUDCO நிறுவனத்தாரிடமிருந்து கடனாக ரூ.163.58 கோடியும் (65%) பெற்று திட்டத்தினை செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்த வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்து குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் மூலமாக கடன் உதவியாக ரூ.163.58 கோடி பெறுவதற்கும் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அனுப்பி வைப்பதற்கும், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கும் ஒப்புதல் அளிக்கவும் மேலும் கடன் உதவி தொகை பெற கடன் பத்திரம் மற்றும் அதற்கான அனைத்து ஆவணங்களிலும் நகராட்சி சார்பாக நகராட்சி ஆணையர் கையொப்பமிட ஒப்புதல் வழங்கவும் மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(7907/2017/இ3)**

**15.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண் TN 32 AL-0735 TATA ACE வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறுவதற்கான கட்டணம், புகையில்லா சான்று கட்டணம், ஒளிரும் ஸ்டிக்கர் கட்டணம் ஆக மொத்தம் ரூ.1,650/– ஐ ஓட்டுநரால் செலவிடப்பட்டுள்ளது. செலவினத்தொகை ரூ.1,650/–ஐ திரு.M.முனியப்பன், ஓட்டுநர் திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. வாகனத்திற்கான செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீரிக்கலாம்
2. செலவினத்தொகை திரு.M.முனியப்பன், ஓட்டுநர் திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். **(6415/2020/எச்2)**

**16.** இந்நகராட்சிக்கு சொந்தமான அங்காளம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள 5 கடைகள், கிழக்கு பாண்டி ரோட்டில் அமைந்துள்ள 7 கடைகள் மற்றும் M.G. ரோட்டில் அமைந்துள்ள 17 கடைகள் ஆக மொத்தம் 29 கடைகளுக்கான குத்தகை உரிமம் 31.03.2019 உடன் முடிவுற்றது. மேற்படி கடைகளை அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007–ன்படி 9 ஆண்டுகள் குத்தகைக்காலம் 31.03.2019 அன்று முடிவடைந்த நிலையில் 01.04.2019 முதல் உரிமம் புதுப்பிக்கும் வகையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களை கண்காணிப்பு தலைவராக நியமித்து மேற்படி 29 கடைகளுக்கான மாத வாடகை நிர்ணயம் செய்து ந.க.எண்.5527.2016/அ2, நாள்.29.09.2020–ல் மண்டல குழுவால் ஒப்புதளிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுப்பணித்துறை சந்தை விலை விகிதத்தின்படியும், மண்டல குழுவால் ஒப்புதல் அளித்ததின் அடிப்படையிலும் 29 கடைகளுக்கு 01.04.2019 முதல் கீழ்க்கண்டவாறு வாடகை மறு நிர்ணயம் செய்து உயர்த்தப்பட்ட குத்தகை மற்றும் பொது ஏல நிபந்தனைகள் அரசாணையின்படி குத்தகை தாரர்களுக்கு குத்தகை புதுப்பித்து ஒப்படைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை அமைந்துள்ள பகுதி | கடை எண் | வரி விதிப்பு எண். | 31.03.2019 வரை வாடகை ரூ. | வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்ட பின் 01.04.2019 முதல் வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | அங்காளம்மன் கோவில் தெரு | 6 | 764 | 1843/– | 2119/– |
| 2. | அங்காளம்மன் கோவில் தெரு | 7 | 765 | 1843/– | 2119/– |
| 3. | அங்காளம்மன் கோவில் தெரு | 8 | 216 | 1787/– | 2055/– |
| 4. | அங்காளம்மன் கோவில் தெரு | 9 | 217 | 1737/– | 1998/– |
| 5. | அங்காளம்மன் கோவில் தெரு | 10 | 218 | 1843/– | 2119/– |
| 6. | கிழக்கு பாண்டி ரோடு | 1 | 219 | 1096/– | 3420/– |
| 7. | கிழக்கு பாண்டி ரோடு | 2 | 220 | 1053/– | 3420/– |
| 8. | கிழக்கு பாண்டி ரோடு | 3 | 221 | 1162/– | 3420/– |
| 9. | கிழக்கு பாண்டி ரோடு | 4 | 222 | 1025/– | 3420/– |
| 10. | கிழக்கு பாண்டி ரோடு | 5 | 223 | 1760/– | 3420/– |
| 11. | கிழக்கு பாண்டி ரோடு | 6 | 224 | 1091/– | 3420/– |
| 12. | கிழக்கு பாண்டி ரோடு | 7 | 225 | 1053/– | 3420/– |
| 13. | மகாத்மாகாந்தி ரோடு | 1 | 192 | 2386/– | 2744/– |
| 14. | மகாத்மாகாந்தி ரோடு | 2 | 193 | 1475/– | 2182/– |
| 15. | மகாத்மாகாந்தி ரோடு | 3 | 194 | 1952/– | 2245/– |
| 16. | மகாத்மாகாந்தி ரோடு | 4 | 195 | 1952/– | 2245/– |
| 17. | மகாத்மாகாந்தி ரோடு | 5 | 196 | 1952/– | 2245/– |
| 18. | மகாத்மாகாந்தி ரோடு | 6 | 197 | 1952/– | 2245/– |
| 19. | மகாத்மாகாந்தி ரோடு | 7 | 198 | 1952/– | 2245/– |
| 20. | மகாத்மாகாந்தி ரோடு | 8 | 199 | 1952/– | 2245/– |
| 21. | மகாத்மாகாந்தி ரோடு | 9 | 200 | 1952/– | 2245/– |
| 22. | மகாத்மாகாந்தி ரோடு | 10 | 201 | 1952/– | 2245/– |
| 23. | மகாத்மாகாந்தி ரோடு | 11 | 202 | 1952/– | 2245/– |
| 24. | மகாத்மாகாந்தி ரோடு | 12 | 203 | 2167/– | 2492/– |
| 25. | மகாத்மாகாந்தி ரோடு | 13 | 204 | 2167/– | 2492/– |
| 26. | மகாத்மாகாந்தி ரோடு | 14 | 205 | 1952/– | 2245/– |
| 27. | மகாத்மாகாந்தி ரோடு | 15 | 206 | 1950/– | 2243/– |
| 28. | மகாத்மாகாந்தி ரோடு | 16 | 207 | 1950/– | 2243/– |
| 29. | மகாத்மாகாந்தி ரோடு | 17 | 208 | 1950/– | 2243/– |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**17.** இந்நகராட்சியில் வருவாய் பிரிவில் குத்தகை இனங்களின் மூலம் வசூலிக்கப்படும் (GST) சரக்கு மற்றும் சேவைவரி தொகையான 01.07.2017 முதல் 30.04.2020 வரையான காலங்களுக்கு வழங்கவும், நிலுவைத் தொகையாக ரூ.11,095/–ஐ வழங்கவும், மற்றும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான (ஏப்ரல்–2020 முதல் மார்ச்–2021) காலங்களில் மாதாந்திர வசூல் தொகையினை E-Filling செய்திட தோராய செலவினமாக ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) VINO & Co., திண்டிவனம் என்ற நிறுவனத்திற்கு மாதா மாதம் பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(A1 / 3035 / 2020)

**18.** இந்நகராட்சிக்குட்பட்ட எல்லீஸ்சத்திரம் சாலையில் உள்ள நுண்உர செயலாக்க மையத்தில் குப்பைகளை பிரித்து எடுக்கும் போது மின்அழுத்தம் காரணமாக ஒயரிங் எல்லாம் எரிந்துவிட்டது. மேலும் மேற்படி மையத்தில் வரும் குப்பைகளை மக்க வைக்கும் பணி தடைபடும் என்பதால், உடனடியாக ஒயரிங் பணி மேற்கொள்ள வேண்டும். ஆகையால் மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

(2925/2020/இ1)

**19.** கொரோனா தொற்று நோய் (Covid-19)பரவாமல் தடுக்க ஏதுவாக, பொதுமக்கள் மற்றும் பணியாளர்களுக்கு கபசுர குடிநீர் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு அறிவுரைகள் வழங்கப்பட்டது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்கள் Tampcol (Tamilnadu Medicinal Plant farms Herbal Medicine corporation Ltd) நிறுவனத்தின் மூலம் 300 கிலோ கபசுர குடிநீர் நகராட்சிக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி பெறப்பட்ட 300 கிலோ கபசுர குடிநீருக்கான காசோலை Tamcol நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதற்கான தொகை ரூ.116235/– (1 கிலோ ரூ.369 வீதம் 300 கிலோவிற்கு ரூ.1,10,700+GST ரூ.5,535/–) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.மேலும் மேற்படி செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2116/2020/எச்1)

**20.** அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.09.2020 அரசாணையில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு செயல்படாத கடைகள் / வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(A1 / 4068 / 2020)

**21.** விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் புதியதாக தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கட்டப்பட்டு வரும் மற்றும் கட்டப்படவுள்ள 78 கடைகளில் அரசாணை (பத்தாண்டு) எண்.100 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்.16.02.2000–ன்படியும் கடை எண்கள்.25 மற்றும் 69 ஆகிய இரண்டு கடைகளை மாற்று திறனாளிக்கும், கடை எண்.70–ஐ சுய உதவிக்குழுவினருக்கும் ஒதுக்கப்பட்டு மேற்படியர்கள் உரிய சான்றுடன் குத்தகை விதிமுறைகளை பின்பற்றி முன் ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.No.29058, 29059 மற்றும் 28831-28837 of 2017–ன் மீது 14.11.2017 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பணை பத்தி எண்.9–ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஏல மற்றும் சிறப்பு நிபந்தனைகளாக சேர்க்கவும், மேலும், ஏல ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை மாவட்ட

அளவிலான செய்தி தாளில் விளம்பரம் செய்யவும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் நகர்மன்ற தீர்மான எண்.2206, நாள்.21.08.2020–ல் அதற்குண்டான உத்தேச செலவினமாக ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. நிர்வாக நலன் கருதி முன் ஏலம் / முன்ஒப்பந்தப்புள்ளி இரண்டு முறைகள் ஒத்திவைக்கப்பட்டதால் மேற்படி செலவினங்களுக்கான கூடுதல் தோராய செலவினமாக மீண்டும் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(7098/2014/அ1)

**22.** மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் மற்றும் தமிழ்நாடு அரசு உத்தரவுப்படி, கொரோனா தொற்று ஏற்பட்ட இடங்களில், மருத்துவ முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மருத்துவ முகாம் நடைபெறும் இடங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் கபசுர குடிநீர் கேன்கள் மூலம் வழங்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியரின் நேரடி ஆய்வின் போது அறிவுரை வழங்கியதன் பேரில், கபசுர குடிநீர் வழங்க ஏதுவாக புதியதாக 10 எவர்சில்வர் கேன்கள் வழங்கும் படி துப்புரவு ஆய்வர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். எனவே புதியதாக 10 எண்ணம் எவர்சில்வர் கேன்கள் (7 1/2 லிட்டர் கொள்ளளவு – 8 மற்றும் 10 லிட்டர் கொள்ளளவு – 2) வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ18000/– த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஊரடங்கு அமலில் உள்ள நிலையில் உடனே வாங்கி வழங்க வேண்டிய நிலையில் சக்தி முருகன் பாத்திரம் மற்றும் பர்னிச்சர் 155, நேருஜி ரோடு, விழுப்புரம் என்ற நிறுவனத்தில் வாங்கியதையும், அதற்கான தொகை ரூ.17,472/– வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2116–11/2020/எச்1)

**23.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் குப்பை அள்ளும் டிப்பர் லாரி TN-32-AL-0614 க்கு வாகன தகுதி சான்று முடிவடைந்து விட்டதால் இவ்வாகனத்தை பழுது நீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ 70.00 ஆயிரத்தை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மேற்கண்ட பணியினை அங்கீகரிக்கப்பட்ட ABS Motors பணிமனையின் மூலம் பழுது நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்,பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்ய மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

(6570/2020/எச்2)

**24.** இந்நகராட்சியில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுக்கும் பொருட்டு கொசுக்களைக் கட்டுப்படுத்தும் பணிகளுக்கான கொசுத்தடுப்பு மருந்துகள் தற்போது இருப்பு ஏதும் இல்லை என்பதாலும், எனவே கீழ்கண்ட மருந்துகளை வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

1. பைரித்திரம் –200லி
2. மாலத்தியான்– 200லி
3. அபேட்–100லி
4. B T Powder-50 லி

மேற்கண்ட மருந்துகளை விநியோகம் செய்ய TNMSC–ல் அங்கீகரிக்கப்பட்ட கீழ்கண்ட நிறுவனம் விலைப்புள்ளி அளித்துள்ளது.

Arunai Enterprises, No.E3/3 TNHB Flat, Model House Lane, Indira Nagar, Adayar, Chennai-600 020.

எனவே வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதாலும், டெங்கு மற்றும் மழைக்கால நோய்களை கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளதாலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களால் தொடர்ந்து வாராந்திர காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தி வருவதாலும், மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும். மேலும் இதற்கான உத்தேச செலவினம் ரூ10.00 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட Arunai Enterprises, No.E3/3 TNHB Flat, Model House Lane, Indira Nagar, Adayar, Chennai-600 020. நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**25.** இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தின் கிழக்குபுறம் நுண்உர செயலாக்க மையத்திற்கு எதிரே சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.10.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.தட்சணாமூர்த்தி, ஒப்பந்ததாரர். | ரூ.6,73,393/– | 0.22% குறைவு |
| 2 | திரு.P.கணேசன், ஒப்பந்ததாரர். | ரூ.6,82,553/– | 1.14% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.தட்சணாமூத்தி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.22% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2925/2020/இ1)

**26.** இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2020-21–ன் கீழ் வார்டு எண்.03, 07, 27 மற்றும் 41 வடிவேல் நகர் விரிவாக்கம் கிருஷ்ணா நகர், செல்வா நகர், செந்தில் நகர், பாரதி நகர், 3–வது தெரு, 4–வது தெரு, 5–வது தெரு மற்றும் 6–வது தெரு, மஞ்சு நகர், அபிராமி தெரு, ஹவுசிங்போர்டு ரோடு, சாமி நகர் மற்றும் அஜித் கார்டன் ஆகிய தெருக்களுக்கு புதிய தார்சாலை மற்றும் சிறுபாலம் மதிப்பீடு ரூ.97.00 இலட்சத்தில் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 14.10.2020 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் கீழ்க்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி பெற்றதால் 20.10.2020 அன்று விலைப்புள்ளி உறைகள் பிரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் மதிப்பீட்டை விட | விலை குறைப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரர். | 9669847/– | 2.49% அதிகம் | 1.50% ரூ.9576012/– |
| 2 | திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரர். | 9756675/– | 3.41% அதிகம் | – |

**அலுவலக குறிப்பு:–**

1. தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 2.49% அதிகம் கொடுத்துள்ளதை தொடர்ந்து விலை குறைப்பு கோரி (Negotitation) அறிவிப்பு வழங்கப்பட்டதையடுத்து 2.49%–லிருந்து 1.50% என (GST உள்பட விலைப்புள்ளி ரூ.9576012/–) குறைப்பு செய்து கொடுத்துள்ளார். திட்டப் பணியின் அவசியம் கருதி 1.50% மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4070/2020/இ1)

**27.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13 மற்றும் 14–ல் உள்ள ஜி.ஆர்.பி தெரு மற்றும் நாயக்கன் தோப்பு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிவறைகளில் உள்ள பழுதடைந்த கதவுகள், பைப்புகள் மற்றும் அடிப்படை வசதிகளான பக்கெட், மக்கு ஆகியவற்றை வாங்குதல் மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ரூ.2.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.10.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | ரூ.2,64,733/– | 0.41% குறைவு |
| 2 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.2,70,788/– | 1.87% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.41% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4070/2020/இ1)

**28.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 42 வார்டுகளுக்கான 36955 சொத்துவரி விதிப்புதாரர்கள் மற்றும் 1659 காலிமனை விதிப்புதாரர்களுக்கு 2020–2021–ம் ஆண்டிற்கான சொத்துவரி கேட்பு அறிவிப்புகள், 7 நாள் அவகாச அறிவிப்பு நோட்டிஸ், 3 நாள் அவகாச அறிவிப்பு நோட்டிஸ், 24 மணி நேர அவகாச அறிவிப்பு நோட்டிஸ் தேவைக்கு ஏற்ப அச்சடித்து வழங்கும் பணி 19.10.2020 தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளி உள்ளூர் நிறுவனத்தினடமிருந்து வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | எண்ணிக்கை விவரம் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | விழுப்புரம் மாவட்ட தொழில் கூட்டுறவு அச்சக சேவை சங்கம் லிட்., விழுப்புரம். | 1000 | 2650 |
| 2 | ஸ்ரீ மீனாட்சி ஆப்செட் பிரிண்டங், எண்.171, நேருஜிரோடு, விழுப்புரம். | 1000 | 2750 |
| 3 | ஸ்ரீ வாசன் பிரிண்டர்ஸ், எண்.29, பரசுராமன் கார்டன், பாணாம்பட்டு ரோடு, விழுப்புரம். | 1000 | 2800 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் உள்ள விழுப்புரம் மாவட்ட தொழில் கூட்டுறவு அச்சக சேவை சங்கம் லிட்., விழுப்புரம் நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே, அந்நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று சொத்துவரி கேட்பினை அச்சடித்து வழங்கவும் மேலும் அதற்கான செலவினம் ரூ.4.00/– (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) நகராட்சின் பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

அ. அனுமதிக்கலாம்.

ஆ. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி மன்றம் அனுமதிக்கலாம். (7598/2020/அ2)

**29.** இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் புதியதாக வணிக வளாகங்கள் கட்டப்பட வேண்டியிருந்ததால் பழைய பழுதடைந்த கட்டிடத்தினை இடித்தமைக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு குத்தகைதாரர்களால் W.P.No.29058, 29059, 28831 முதல் 28837 of 2017 நாள்.14.11.2017–ல் தீர்ப்பாணை வழங்கப்பட்டது.

தற்போது பழைய பேரூந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் மற்றும் கட்டப்பட உள்ள கடைகளில், பழைய குத்தகைதாரர்கள் என்ற உரிமையில் 14.11.2017–ந் தேதிய தீர்பாணையினை மேற்கோல் காட்டி கட்டப்பட்டு வரும் கடைகளில் ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கோரிக்கை மனுக்கள் கொடுத்துள்ளதன் பேரில் மேற்படி வழக்குகளில் 14.11.2017–ம் தேதிய தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ள சாரம்சங்களின் மீது சட்டக்கருத்துரு கோரப்பட்டதற்கு திரு.P.சீனிவாஸ் வழங்கறிஞர் அவர்கள் சட்டக்கருத்துரு வழங்கி, அதற்கான கட்டணம் ரூ.5,000/– கோரியுள்ளதால் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (அ1/7098/2014)

**30.** மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்கள் கொரோனா நோய் தொற்று உள்ள பகுதிகளில், மருத்துவ முகாம் நடைபெறும் இடங்களில் கள ஆய்வு செய்த போது, முகாமிற்கு நகர்புற ஆரம்ப சுகாதார மையத்திலிருந்து (1. மகாராஜபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் 2. PJN Road நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்) செவிலியர்கள், காலதாமதமாக வருவது குறித்து காரணம் கோரிய நிலையில், அவர்கள் வாகன போக்குவரத்து வசதி இல்லாததாலும், மேலும் மருத்துவ முகாம் ஒவ்வொரு நாளும் வேறு வேறு இடங்களில் நடைபெறுவதால் காலதாமதமாக வருவதாக தெரிவித்ததை அடுத்து, அவர்களை நகர்புற ஆரம்ப சுகாதார மையத்திலிருந்து ஆட்டோக்கள் மூலம் அழைத்து வந்து மீண்டும் அடுத்த முகாமிற்கும் பிறகு முகாம் நிறைவுற்றதும் மீண்டும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்று விடவும் , நகராட்சி மூலம் ஏற்பாடுகள் செய்து தர உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, அலுவலகம் மூலம் 2 ஆட்டோக்கள் வசதி செய்து 25.08.2020 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் ரூ50000/– க்கு நகர்மன்ற தீர்மான எண். 2224 நாள். 31.08.2020 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 25.08.2020 முதல் 07.09.2020 வரை ரூ15500/– பட்டியல் தொகை வழங்கப்பட்டு விட்டது. இந்நிலையில் தற்போது 08.09.2020 முதல் 13.10.2020 வரை ஆட்டோக்கள் பயன்படுத்தப்பட்டதில் ரூ.46800/– பட்டியல் தொகை கோரியுள்ளனர். மேலும் COVID-19 மருத்துவ முகாம் தொடர்ந்து நடைபெற்று வரும் சூழ்நிலையில் கூடுதலாக செலவினத்தொகை ரூ60,000/–க்கு (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.மேலும் மேற்படி செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதி அல்லது நகராட்சி பொது நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(2116–21/2020/எச்1)**

**31.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.14 ஜி.ஆர்.பி தெருவில் போதிய தண்ணீர் இல்லாததால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாவதை தவிர்க்கும் பொருட்டு, மேற்கண்ட தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம். (7051/2020/இ2)

**32.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுறுத்தலின்படி எதிர்வரும் 2020–21–ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் ஏற்படும் இயற்கை இடர்பாடுகள் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் விதமாக நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக பாதிப்படையும் இடங்களை கண்டறியப்பட்டு அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மணல் மூட்டை வைத்தல், சௌவுக்கு சாரம் அமைத்தல், பாதிக்கப்பட்ட சாலைகளை தற்காலிகமாக சீரமைத்தல், அதிக காற்றின் போது விழுந்துவிட்ட மரம் செடி கொடிகளை இயந்திரம் மற்றும் ஆட்கள் மூலம் அகற்றுதல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.11.00 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம். (7052/2020/இ2)

**33.** விழுப்புரம் நகராட்சி 2018–ம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகரில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது திறந்தவெளி கழிப்பிடங்களற்ற நகராட்சி (ODF+) என அறிவிக்கவும். இது சம்மந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்களின் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் கோரி ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தொகையையும் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2680/2017/எச்4)**

**34.** விழுப்புரம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் தற்போது **6** பெரிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் **1** முதல் **42** வார்டுகளில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் பழைய திட்டம் மற்றும் புதிய திட்டம் மூலம் தினசரி **10.04** MLD குடிநீரை Liquid Chlorination செய்து விநியோகம் செய்யப்படும் பொழுது சில இடங்களில் தெருக்களின் முனைப்பகுதியில் (Tailend) Chlorine அளவு **0.20** PPM–க்கும் குறைவாக சரியான அளவில் கலக்கப்படாமல் குடிநீர் விநியோகம் செய்வதால் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. மேலும் Liquid Chlorination செய்யக்கூடிய மின்மோட்டார் மற்றும் வால்வுகள் அடிக்கடி பழுதடைவதால் சீரான முறையில் Chlorination செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட காரணங்களால் Liquid Chlorination–க்கு பதிலாக புதியதாக Gas Chlorination செய்வதற்கு 6KG/HR Vacuum Feed Gas Chlorinator சப்ளை மற்றும் பொருத்துதல் பணிக்கு குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**24.10** இலட்சம் தயார் செய்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(7503/2020/இ2)**

**35.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் மின்மோட்டர் பழுது, மின்தடை, குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வரும் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் அவசர குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் குடிநீரினை தனியார் வாகனம் மூலம் 20.08.2020 முதல் 21.09.2020 வரை சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**4.55** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியத்தை கருதி ஆணையரின் முன் அனுமதி பெற்று பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(8440/2020/இ2)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**விழுப்புரம் நகராட்சி**